## 153. கர்த்தரை எக்காலத்தில்

### பல்லவி

கர்த்தரை எக்காலத்தில் ஸ்தோத்தரிப்பேனே
அவர் துதி எப்போதும் என் நாவில் இருக்குமே

### சரணங்கள்

1. கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மை பாராட்டும்
சிறுமைப்பட்டவர்கள் அதை கேட்டு மகிழ்வார்கள்
- கர்த்தரை

2. என்னோடுகூட கர்த்தரை மகிமைப்படுத்திடுங்கள்
ஒருமித்து அவர் நாமம் உயர்த்திடுவோம்
- கர்த்தரை

3. கர்த்தரை தேடினேன் செவிகொடுத்தார்
என்னுடைய பயத்தை எல்லாம் நீங்கலாக்கிட்டார்
- கர்த்தரை

4. அவரை நோக்கி பார்த்து பிரகாசம் அடைந்தேன்
எனது முகம் வெட்கப்பட்டு போகவில்லை
- கர்த்தரை

5. இந்த ஏழை கூப்பிடும் குரலை கேட்டு
என்னை என் இடுக்கண்களுக்கு நீங்கலாக்கினார்
- கர்த்தரை